**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*******

**ஊடக அறிக்கை**

**பெருந்தோட்டப் பகுதிகளில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் பொகவந்தலாவை, ஹட்டன் பிரிட்வெல் தோட்டத்தில் கட்டப்பட்ட 155 வீடுகளின் கையளித்தல் வைபவம்**

ஹட்டன், பொகவந்தலாவையிலுள்ள பிரிட்வெல் தோட்டத்தில் பெப்ரெவரி 24, 2019 அன்று நடைபெற்ற ஒரு விசேட வைபவத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 155 வீடுகள், இலங்கைப் பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோரால் கூட்டாக, கௌரவ அமைச்சர் பழனி திகாம்பரம் - மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரின் பிரசன்னத்தில் பயனாளிகளுக்கு கையளித்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் பலர், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், நடைமுறைப்படுத்தும் முகவரமைப்பான இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பொகவந்தலாவை பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கைப் பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்க தனதுரையில், இலங்கைக்கு இந்தியாவினால் அளிக்கப்படும் அபிவிருத்தி உதவிகளுக்கு இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோடி அவர்களுக்கும் மற்றும் இந்திய அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

வைபவத்தில் உயர் ஸ்தானிகர் தனதுரையில், புதிதாக தனி வீடுகளாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் பெருமைமிகு உரிமையாளர்களைப் பாராட்டினார். இலங்கையில் இந்தியாவின் வீட்டுச் செயல்திட்டமானது வெளிநாடொன்றில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் US $ 350 இற்கு மேற்பட்ட தொகையிலமைந்த (இலங்கை ரூபாய்களில் 50 பில்லியன்களை அண்மித்த) மிகப் பெரிய நன்கொடைத் திட்டமென்பதை சுட்டிக் காட்டினார். மொத்தம் உறுதியளிக்கப்பட்ட 63,000 வீடுகளுள் 47,000 வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளதையும் அவர் நினைவுபடுத்தினார்.

இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகளின் பயனறுதலுக்கான இந்தியாவின் உதவிகளைச் சுட்டிக்காட்டிய அவர், கூடுதலான அமைதி மற்றும் சுபீட்சம் நோக்கிய பயணத்தில் இலங்கை மக்களுடன் பங்குபற்றுவதற்கு இந்திய அரசாங்கம் மற்றும் மக்களினதும் பற்றுறுதியையும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பு
பெப்ரெவரி 24, 2019